பட்டது. இந்த மத்தகிரி காட்டுவாரியில் ஆண்டு ஆண்டு தோறும் மழைக் காலங்களில் அதிக வெள்ளம்பெருக்கெடுத்து ஓடுவதால் அந்தப் பகுதியில் இருக்கின்ற விளை நிலங்கள் குறிப்பாக விவசாயிகளின் கிணறுகள், பம்பு செட்டுகள் மூடப்பட்டு மிகவும் பொருட் சேதமும், ஆட்சேதமும் ஏற்படுகிறது. அதே சமயத்தில் அதன் அருகில் இருக்கின்ற ஹைவேஸ் ரோடு பாதிக்கப்படுகிறது. இதனால் பஸ் போக்குவரத்திற்கும் தடங்கல் ஏற்படுகிறது. ஆகவே, நடப்பு ஆண்டில் இந்த மத்தகிரி காட்டுவாரியை அமைப்பதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மத்தகிரி காட்டுவாரி என்பது வைய்ய மலையில் உற்பத்தியாகி ஐய்யனூர் ஏரிக்குச் செல்கிறது. ஏற்கனவே இது நீண்ட நாள் பிரச்சினை என்பதை இந்த அரசு அறியும். ஆகவே, அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதத்தில் கடந்த காலங்களில் இருந்த அரசு செயற்படுத்தாவிட்டாலும் கூட நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி வந்தற்குப் பின்னால் உடனடியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ரூபாய் 85 ஆயிரத்துக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பணிகளைச் செய்வதற்கு இருக்கிறோம், இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 52, டாக்டர் ச. ஆரோக்கியசாமி இருக்கையில் இல்லை.

திரு. எம். தங்கவேல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

52—

திருச்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.

10579—டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மூதறிஞர் இராஜாஜி டி. பி. சானிடோரியம் அமைந்துள்ள இடத்தில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கவும் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை நகரப் பேருந்து நிலையமாக பயன் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. சானிடோரியம் உள்ள இடத்தில் 12 ஏக்கர் நிலத்தை திருச்சி நகராட்சிக்கு ஒப்படைக்க திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருக்கடியாக இருக்கின்ற அந்த பேருந்து நிலையத்திற்கு மாற்று பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். அதற்கு நன்றியைத் தெரிவிப்பதோடு அந்த மாற்று பேருந்து நிலையம் எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத் தலைவர் அந்த நிலத்தை ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் விரைவாக பேருந்து நிலையம் அமைக்கும்பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் தற்பொழுது சிந்தாமணியிலே ஒரு பேருந்து நிலையம் இருக்கிறது. இப்போது புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் போது சிந்தாமணி பேருந்து நிலையம் அங்கே இருக்குமா? அல்லது சிந்தாமணிக்கு என்று தனியாக பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையம் உருவாக்குகின்ற நேரத்தில் இது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. பாப்பா சுந்தரம்.

[1993 பிப்ரவரி 10

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ராஜாஜி டி. பி. சானிடோரியத்தில் பேருந்து நிலையத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது திருச்சியின் தெற்கு பகுதியிலே இருப்பதால் வடக்கு அல்லது மேற்கு பகுதிகளில் இருந்து தான் அதிக பேருந்துகள் வருவதால் அது நகரின் மையப் பகுதியிலே இருப்பதால், நகரத்திலே போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, திருச்சியின் வடக்குப் பகுதியிலே ஆர்ஜிதம் செய்யப்பட்ட சிந்தாமணியின் பஸ் ஸ்டாண்ட் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியினுடைய பல்வேறு பகுதிகளைக் கருத்திலே எடுத்துக் கொண்டு தான் இந்தப் பேருந்து நிலையத்திற்கு நிலத்தை தேர்வு செய்திருக்கிறோம். அந்த இடத்தில் தான் நவீன பேருந்து நிலையம் அமைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜி. ஆர். மாலா.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு, மறைந்த நமது முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியின் போது, சிந்தாமணி பகுதியில் புதிதாக ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த 7 ஆண்டுகளாக அதற்கு செயலாக்க வடிவம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. மேலும் திருச்சி மையமாக இருப்பதால் வட திசையில் இருந்து வரும் பேருந்துகள் தென் திசைக்குப் போகும்போது திருச்சி வழியாகப் போவதால் தமிழக மக்களுக்கே இது ஒரு பேருதவியாக இருக்கும் வண்ணம் இருப்பதால் சிந்தாமணி பகுதியில் புதிய ஒரு பேருந்து நிலையம் அமைக்க வரும் நிதியாண்டில் செயலாக்கம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே இருக்கிற பலவேறு பகுதி மக்களுடைய கருத்துக்களை எல்லாம் ஆய்விலே எடுத்துத் தான் இப்போது மூதறிஞர் ராஜாஜி டி. பி. சானிடோரிய பகுதியில் நவீன பேருந்து நிலையம் அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. வேறு பகுதிக்கு மாற்றுகிற யோசனை அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.